பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
02 08 2026 SUNDAY 6.30 PM

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) போதைப்பொருள் இல்லா சமூகத்தை உருவாக்க மாணவர்கள் பாடுபடவேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) சூரியசக்தி மின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3) திமுக மக்கள் விரோத போக்கினை கடைபிடித்து வருவதாக மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் குற்றம் சாட்டியுள்ளார்.

4) பொள்ளாச்சி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

5) 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

போதைப்பொருள் இல்லா சமூகத்தை உருவாக்க மாணவர்கள் பாடுபடவேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக தொடங்கிவைத்த வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான போதைப்பொருள் இல்லா இளையோர் உறுதிமொழி இயக்கத்தையொட்டி இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நாட்டின் வளர்ச்சியில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறினார்.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பான தேசிய இயக்கத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த 100 வாரங்களுக்கு இந்த இயக்கம் மேறகொள்ளப்பட உள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

*சூரியசக்தி மின் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*2014-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சூரியசக்தி மின் உற்பத்தி 50 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த துறையில் விரைவான வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

<<<<<<>>>>>

*முதலமைச்சரின் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை விரிவாக்கம் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.*

*கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விரைவில் இதுதொடர்பாக நல்ல முடிவு எடுக்கப்படும் என்று கூறினார்.*

<<<<<<>>>>>

*மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு தவெக அரசு செயல்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் கூறியுள்ளார்.*

*தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் ஆடிப்பெருக்கு விழாவை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.*

*ஆடிப்பெருக்கு என்பது தமிழர்களின் வாழ்வியல் தத்துவம் என்று அவர் கூறினார்.*

*நீர் மேலாண்மையையும், விவசாயத்தையும் நமது முன்னோர்கள் எவ்வாறு மதித்து போற்றினார்கள் என்பதற்கு இந்த விழாவே எடுத்துக்காட்டாகும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*தருமபுரி மாவட்டத்தின் அடையாளமாகவும் ஒகேனக்கல் திகழ்கிறது என்றும் அமைச்சர் கூறினார்.*

<<<<<<>>>>>

*திமுக மக்கள் விரோத போக்கினை கடைபிடித்து வருவதாக மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் குற்றம் சாட்டியுள்ளார்.*

*சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சரை தனிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் மேகதாது பிரச்சினை குறித்து அறிக்கை விடுவதாக தெரிவித்தார்.*

*(Sound Byte – நிர்மல்குமார் – 42 Sec.)*

<<<<<<>>>>>

மேகதாது பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தவெக அரசு உடனடியாக அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையில் தவெக அரசு மெத்தனத்துடன் செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சரோ, நீர்வளத்துறை அமைச்சரோ இப்பிரச்சினை குறித்து இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று அவர் கூறினார்.

இப்பிரச்சினையில் அரசுக்கு ஒத்துழைக்கவும், ஆலோசனைகளை வழங்கவும் அனைத்துக் கட்சிகளும் தயாராக உள்ளதாகவும் திரு ரகுபதி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மேகதாது அணை கட்ட கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை தமிழகம் தடுத்து நிறுத்தியே தீர வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பிரச்சினையில் தவறான நிலைப்பாடுகளை தவெக அரசு எடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் வேளாண் பிரிதிநிதிகளின் கருத்துகளை கேட்டு, தெளிவான செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

பொள்ளாச்சி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

உடுமலையிலிருந்து பொள்ளாச்சி நோக்கி சென்று கொண்டிருந்த கார், நல்லம்பள்ளி அருகே லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – ஹரிஹரன் - 45 Sec. )*

<<<<<<>>>>>

நம் நாட்டின் தொன்மையையும், கலாச்சாரத்தையும் சித்த மருத்துவம் உலக அளவில் பறைசாற்றியுள்ளதாக உச்சநீதிமன்ற நீதிபதி திரு அரவிந்த்குமார் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் அரியூர் தங்கக் கோவில் வளாகத்தில் சித்த மருத்துவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

128 நாடுகளை சேர்ந்தவர்கள் நம் நாட்டிற்கு வந்து கல்வி பயின்று செல்வதாக அவர் கூறினார்.

பாரம்பரிய மருத்துவம் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்ட உலக சுகாதார நிறுவனம் அதன் நன்மைகள் கண்டு ஆச்சரியமடைந்ததாகவும் நீதிபதி திரு அரவிந்த்குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

## மாவட்டச் செய்திகள்

கோவை செம்மொழி பூங்காவில் மாநில அமைச்சர் திரு சம்பத் குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------------

நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 95 லட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திருமதி விஜயலட்சுமி இன்று திறந்து வைத்தார்.

--------------------

திருவாரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் ஜூலை மாதத்திற்கான உண்டியல் எண்ணும் பணி இன்று நடைபெற்றது. காணிக்கையாக ஐந்து கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் ஆபரணங்கள் கிடைத்துள்ளன.

--------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை தொடங்கி மூன்று நாட்களுக்கு முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே சென்று பொது விநியோக திட்டப் பொருட்கள் விநியோகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அண்ணாநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூர்வாரும் பணிகளை ஆணையர் திரு சமீரன் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

அஜர்பைஜானின் *Baku*-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் *48* கிலோ எடைப்பிரிவில் *Aaryan* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*55* கிலோ எடைப்பிரிவில் *Prathamash Suryakanth Patil*-லும், *110* கிலோ எடைப்பிரிவில் *Arush Rana*-வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-----------

பிலிப்பைன்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் *Ginpaul Sonna* தங்கப்பதக்கத்தையும், *Aryamann Tandon* வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் *Treesa Jolly – Gayatri Gopichand* இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

---------------

காமன்வெல்த் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Manav Thakkar – Taneesha Kotecha* இணை தங்கப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, மலேசியாவின் *Aixin Tee – Rui Zhe Richard* இணையை வென்றது.

-------------

இந்தியாவிற்கு எதிராக *21* வயதுக்கு உட்பட்டோருக்கான எட்டு ஹாக்கிப் போட்டிகளில் பங்கேற்பதற்காக மலேசியா அணி பெங்களூரு வந்தடைந்தது.

-----------

காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன், கிளாஸ்கோவில் இன்று நிறைவடைகின்றன

------------

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரில் பும்ரா பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காயத்திலிருந்து முழுமையாக குணமடையாத காரணத்தால் அவர் இந்த தொடரில் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>